# MCOP No.52/2021

**தேதி- 20.01.2025**

**பெயர் : திரு. ராஜேஷ்குமார், த/பெ.மாணிக்கவாசகம்**

**ம.சா.3 10.01.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

என் கடையில் வேலை செய்த பையனுக்கு விபத்து ஏற்பட்டது என்ற காரணத்தினால் நான் இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் என்ன கடை வைத்துள்ளேன் என்றால் மொபைல் ஷாப் வைத்துள்ளேன். விபத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் நேரில் பார்க்கவில்லை, விபத்து ஏற்பட்டு அரை மணி நேரம் கழித்து எனக்கு போன் தகவல் கிடைக்கப் பெற்று நான் விபத்து நடந்த இடத்திற்குச் சென்று பார்த்த போது அங்கு ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றனா்.

நீதிமன்றத்திலிருந்து எனக்கு ஏதாவது சம்மன் வந்ததா என்றால் இல்லை. என்னிடம் வேலை செய்த பையனுக்கு (அன்புவிற்கு) நான் எவ்வளவு சம்பளம் வழங்கினேன் என்றால் ரூ.16,500/-. அதற்கான ஆதாரம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அன்புவின் தந்தையிடம் கொடுத்துள்ளேன் மற்றும் அன்புவின் வங்கி கணக்கில் பரிவா்த்தனை செய்துள்ளேன்.

நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மனுதாரா்களை நன்றாக தெரியும் என்று சொல்லியுள்ளேன், அதனால் நான் மனுதாரா்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.